# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2055 புரட்டாதி 07 செவ்வாய்க்கிழமை 23.09.2025 கதிர் 318



யாழ் மண்ணிலிருந்து இணைய வெளிக்கு -
Yarl Muttram
Youtube Channel




# அநுர அரசின் சிறந்த வேலைத்திட்டங்களுக்கு ஆதரவு!



## இராதாகிருஷ்ணன் எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, செப். 23

“அநுர அரசு சிறப்பான வேலைத்திடடங்களை முன்னெடுத்தால் அதற்கு ஆதரவளிக்கப்படும்.” - என்று மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான வே.இராதாகிருஷ்ணன் தெரிவித்தார். ஐக்கிய மக்கள் கூட்டணியின் இன்றைய நாடாளுமன்றக் குழுக் கூட்டம் முடிவடைந்த பின்பு ஊடகங்களிடம் கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். எதிரணிகளின் ஒன்றிணைவு பற்றி எழுப்பப்பட்ட கேள்விக்கு, “அது நல்லதுதானே.” - என்று இராதாகிருஷ்ணன் எம்.பி. பதிலளித்தார். தேசிய மக்கள் சக்தி அரசின் ஓராண்டு நிறைவு எப்படி என்ற கேள்விக்கு, “நல்லது, அநுர அரசு நல்ல வேலைகளைச் செய்தால் ஆதரவளிப்போம். தவறான விடயங்களைச் செய்தால் அவற்றை எதிர்ப்போம்.” - என்று இராதாகிருஷ்ணன் எம்.பி. பதிலளித்தார்.

# பாதுகாப்பு பிரதி அமைச்சருக்கு எதிரான பிரேரணையை எதற்காக நிராகரித்தீர்கள்?

## நாடாளுமன்றில் சபாநாயகரிடம் சஜித் கேள்வி



கொழும்பு, செப். 23

பாதுகாப்பு பிரதி அமைச்சர் அருண ஜயசேகரவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை நிராகரிப்பதற்கு ஏதுவாக அமைந்த காரணங்களைச் சபைக்குச் சமர்ப்பிக்குமாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, சபாநாயகரிடம் இன்று கோரிக்கை விடுத்தார்.

நாடாளுமன்றத்தில் இன்று உரையாற்றிய எதிர்க்கட்சித் தலைவர்,

“பிரதி அமைச்சர் அருண ஜயசேகர தொடர்பில் எமக்குத் தனிப்பட்ட எந்தப் பிரச்சினைகளும் இல்லை. அவர் தற்போது பதில் பாதுகாப்பு அமைச்சராகப் பதவி வகித்து வருகின்றார். அவருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டு வந்ததன் பிற்பாடு, அதனை நிராகரிப்பதற்கு அடிப்படையாக இருந்த செயலாளர்கள் குழாமின் அறிக்கைகள் மற்றும் சட்டமா அதிபரின் அறிக்கை உள்ளிட்ட ஏனைய விடயங்களை இந்தச் சபைக்குச் சமர்ப்பிக்குமாறு கோருகின்றேன்.” - என்றார்.

## நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை நிச்சயம் நீக்கப்படும் என்று ரில்வின் அறிவிப்பு



கொழும்பு, செப். 23

“வடக்கு, கிழக்கு மக்களின் உரிமைகளை உறுதிப்படுத்துவதற்குரிய யோசனை, நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை நீக்கம் மற்றும் மனித உரிமை பாதுகாப்பு உட்பட முக்கிய பல

7➤

## திலீபனுக்குச் சிலை வைக்க இடம் தாருங்கள்!

### வவுனியா மேயரிடம் கடிதம் மூலம் வேண்டுகோள்



வவுனியா, செப். 23

தியாக தீபம் திலீபனுக்கு வவுனியாவில் சிலை வைப்பதற்கு இடம் தாருங்கள் எனக் கோரிக்கை விடுத்து வவுனியா வர்த்தகரான எஸ்.சிவரூபன் வவுனியா மாநகர மேயரிடம் கடிதம் ஒன்றைச் சமர்ப்பித்துள்ளார்.

அந்தக் கடிதத்தில், தமிழர்களின் உன்னத

7➤

# வவுனியாவில் தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல்







வவுனியா, செப். 23

தியாக தீபம் திலீபனின் 38 ஆவது ஆண்டு நினைவு தினம் வவுனியாவில் உள்ள வாடிவீட்டில் நடைபெற்றது.

இதன்போது மாவீரர்களின் பெற்றோர் சார்பாக ஈகைச்சுடர் ஏற்றப்பட்டு மலர் மாலை அணிவிக்கப்பட்டு மலரஞ்சலியும் செலுத்தப்பட்டது.

அத்துடன் மாணவர்களுக்கான வினாவிடை மற்றும் நடனப் போட்டிகளும் இடம்பெற்றதுடன் வெற்றி

7➤

- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -



## சபுமல் யானை மீது துப்பாக்கிச் சூடு

கொழும்பு, செப் .23

ஹுருலு சுற்றுச்சூழல் பூங்கா மற்றும் மின்னேரியா தேசிய பூங்காவை பூர்வீகமாகக் கொண்ட 'சபுமல்' என்று அழைக்கப்படும் யானை மீது துப்பாக்கி பிரயோகம் நடத்தப்பட்டுள்ளது.

கவுடுல்ல தேசிய பூங்காவில் உள்ள சஃபாரி ஜீப் சாரதிகள் இதைக் கண்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சுமார் 25 வயதுடைய இந்த யானையின் தந்தங்கள் இரண்டரை அடிக்கு மேல் நீளம் கொண்டவை என்பது விசேட அம்சமாகும்.

மூன்று பூங்காக்களில் சுற்றித் திரியும் இந்த யானையின் முன் வலது காலில் இரண்டு முறை சுடப்பட்டுள்ளதுடன், யானையைப் பார்த்த சுற்றுலாப் பயணிகள், முழங்காலுக்குக் கீழே துப்பாக்கிச் சூட்டுக் காயங்களிலிருந்து சீழ் வெளியேறுவதாகக் கூறுகின்றனர்.

யானைக்கு உடனடி சிகிச்சை தேவை என்றும், யானை மிகவும் மோசமான நிலையில் இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

நேற்று அங்கு சென்ற சுற்றுலாப் பயணிகள் குழு, கவுடுல்ல குளத்தில் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி நொண்டி நடக்கும் யானையை வீடியோவாக பதிவு செய்துள்ளனர். (ஐ)

## 5 கோடி ரூபாய் மதிப்புள்ள குஷ் சிக்கியது



கொழும்பு, செப் .23

கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலைய வருகை முனையத்திலிருந்து ரூ. 50 மில்லியனுக்கும் அதிகமான மதிப்புள்ள "குஷ்" போதைப்பொருளுடன் வெளியேற முயன்ற இரண்டு பயணிகள் செவ்வாய்க்கிமை (23) காலை "கிரீன் சேனல்" வழியாக வெளியேற முயன்ற போது சுங்க போதைப்பொருள் கட்டுப் பாட்டுப் பிரிவின் அதிகாரிகள் குழுவால் கைது செய்யப்பட்டனர்.

அவர்களில் ஒருவர் கொழும்பில் வசிக்கும் 29 வயதுடைய பெண். மற்றவர் இந்தியாவின் சென்னையில் வசிக்கும் 48 வயதுடைய நபர். அவர்கள் எடுத்துச் சென்ற இரண்டு பொதிகளில், 05 கிலோகிராம் 092 கிராம் "குஷ்" அடங்கிய ஒரு பையுடனும், 05 பொதிகள் இருந்தனர். "குஷ்" என்ற பொருளும், அவற்றைக் கொண்டு வந்த இரண்டு பயணிகளும் மேலதிக விசாரணைக்காக கட்டுநாயக்க விமான நிலைய காவல்துறை போதைப்பொருள் தடுப்புப் பணியக அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (ஐ)

## போதைப் பொருள் வியாபாரம் மூவர் கைது

இளைஞர்களை இலக்கு வைத்து நீண்ட காலமாக போதைப் பொருள் வியாபாரத்தில் செய்துவந்த பிரதான சந்தேக நபர் உள்ளிட்ட குழுவினரை சம்மாந்துறை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அம்பாறை மாவட்டம் சம்மாந்துறை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட வளத்தாப்பிட்டி இஸ்மாயில் புரம் புதிய கிராமம் பகுதியில் போதைப் பொருள் வியாபாரம் நூதனமான முறையில் முன்னெடுக்கப்படுவதாக சம்மாந்துறை ஊழல் ஒழிப்பு பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின் போது 28 வயதுடைய இரு சந்தேக நபர்களும் 25 ,40 வயது சந்தேக நபர்களும் திங்கட்கிழமை(22) அன்று கைது செய்யப்பட்டனர்.

கைதானவர்கள் வளத்தாப்பிட்டி இஸ்மாயில் புரம் கல்லரிச்சல் 04 பகுதி வளத்தாப்பிட்டி இஸ்மாயில் புரம் புதிய கிராமம் பகுதி சம்மாந்துறை 03 பகுதியை சேர்ந்தவர்கள் என தெரியவருகிறது. மேலும் அவர்களிடமிருந்து 2321 மில்லிகிராம் ஐஸ் போதைப் பொருள், 380 மில்லிகிராம் ஹெரோயின் போதைப் பொருள், ஒரு தொகை பணம், 3 கையடக்கத் தொலைபேசிகள், 3 பவர் பேங்க், 3 வங்கி அட்டை என்பன மீட்கப்பட்டிருந்தன.

மேலும் சந்தேக நபர்கள் உள்ளிட்ட சான்றுப் பொருட்கள் சட்ட நடவடிக்கைகளுக்காக சம்மாந்துறை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சந்தேக நபர்களில் மூவர், நீதிமன்றத்தால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டு கைது செய்யப்படாமல் தலைமறைவாகி இருந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)



# சொத்துக்கள் கேள்விக்கு ஊமையான ஹந்துன்நெத்தி

கொழும்பு, செப் .23

ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் அமைச்சர்கள், பிரதியமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் தங்களுடைய சொத்து விபரங்களை சமர்ப்பித்து வருகின்றனர். இதில், சிலரினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள சொத்துக்கள் தொடர்பில் பொதுவெளியில் சர்ச்சைகள் கிளம்பியுள்ளன.

இந்நிலையில், சொத்துக்கள் தொடர்பிலான கேள்விகளுக்கு பதிலளிக்காமல், அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி ஊமையான சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது.

தனது சொத்துக்கள் குறித்து தன்னிடம் கேள்விகள் கேட்பது புத்திசாலித்தனம் அல்ல என்று கைத்தொழில் மற்றும் தொழில்முனைவோர் மேம்பாட்டு அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி பதிலளித்தார்.

தெரண 360 நிகழ்ச்சியில் திங்கட்கிழமை பங்கேற்றபோது அவர் இவ்வாறு கூறினார்.

சுனில் ஹந்துன்நெத்தி பின்வருமாறு கூறினார்.

உங்கள் கேள்விக்கு நான் பதிலளிக்கலாம் அல்லது பதிலளிக்காமல் போகலாம். இதை இங்கே விசாரிப்பது எங்களுக்கு நியாயமில்லை. நாட்டில் ஒரு சட்டம் உள்ளது. லஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துரைகளைப்



புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவிடம் இந்த சொத்து பதிவுகளை பகிரங்கப்படுத்தியுள்ளது, நீங்கள் அவர்களை தெருவில் சந்திக்கும் போது கேள்வி கேட்கக்கூடாது.

இது குறித்து யாருக்காவது கேள்வி இருந்தால், அவர்கள் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துரைகளைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவுக்கு எழுதி விசாரிக்கலாம். இதற்கு என்னால் பதிலளிக்க முடியாது என்பதல்ல. இந்த கட்டத்தில், ஹந்துன்நெத்திக்கும் தொகுப்பாளர் கலிந்து கருணாரத்னவுக்கும் இடையே ஒரு சூடான வார்த்தைப் பரிமாற்றத்தைக் காணலாம்.

தொகுப்பாளர்:நான் உங்களை தெருவில் சந்திக்கவில்லை.

இது ஒரு தொலைக்காட்சி நேர்காணல். மக்கள் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். கேள்விகள் கேட்க எனக்கு உரிமை உண்டு. நீங்கள் விரும்பினால் அமைதியாக இருக்கலாம்.

நீங்கள் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளை சமர்ப்பித்த விதத்தின் நம்பகத்தன்மையில் சிக்கல் உள்ளது. சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் சட்டத்தை நீங்கள் கேலிக்குரிய முறையில் முன்வைத்திருப்பதும் தெளிவாகிறது.

ஹந்துன்நெத்தி: இதுபோன்ற கேள்விகளை நீங்கள் கேட்பது தவறு. இதற்காக நாட்டில் ஒரு அமைப்பு உள்ளது.

தொகுப்பாளர்: உங்களிடம் 47 பேர்ச் சொத்து உள்ளது. அந்த நிலம் கையகப்படுத்தப்பட்ட விதம் மற்றும் அதன் மதிப்பு சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் அறிவிப்பில் சேர்க்கப்படவில்லை.

சுனில் ஹந்துன்நெத்தி : அதில் ஏதேனும் சிக்கல் இருந்தால், நீங்கள் புகார் அளிக்கலாம் என்றார். (ஐ)



## குருக்கள்மடம் புதைகுழியை தோண்டுவதற்கான செலவு அறிக்கை – நீதி அமைச்சுக்கு அனுப்பிவைக்குமாறு பணிப்புரை

மட்டக்களப்பு குருக்கள்மடம் புதைகுழி தோண்டுவதற்கு திட்டமிடப்பட்டுள்ள செலவு நிதி அறிக்கையினை மட்டக்களப்பு மேல் நீதிமன்றம் ஊடாக நீதி அமைச்சுக்கு அனுப்பிவைக்குமாறு களுவாஞ்சிகுடி நீதிவான் நீதிமன்றம் பணிப்புரை விடுத்துள்ளது.

குருக்கள்மடம் மனித புதைகுழி தொடர்பான வழக்கு இன்று களுவாஞ்சிகுடி நீதிவான் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது.

களுவாஞ்சிகுடி நீதிவான் நீதிமன்ற நீதிபதி ஸப்னா ஸிராஜினால் இன்றை வழக்கு விசாரணைகள் எடுத்துகொள்ளப்பட்டது.

இந்த விசாரணையில் பாதிக்கப்பட்ட மக்கள் சார்பில் குரல்கள் இயக்கத்தின் சட்டத்தரணி முபாறக் முகஸம் உட்பட சட்டத்தரணிகள் ஆஜராகியிருந்தனர்.

கடந்த 11-09-2025அன்று நீதிமன்றில் கொழும்பு பிரதம சட்டவைத்திய அதிகாரியினால் சமர்பிக்கப்பட்டிருந்த செலவு நிதி அறிக்கை தொடர்பில் மேலதிக அபிவிருத்திகள் இடம்பெற்றுள்ளதா என்பது தொடர்பில் இன்று ஆராயப்பட்டுள்ளது.

செலவு நிதி அறிக்கையினை ஏற்றுக்கொண்ட களுவாஞ்சிகுடி நீதிவான் நீதிமன்றம் அதனை மட்டக்களப்பு மேல் நீதிமன்றம் ஊடாக நீதி அமைச்சுக்கும் நிதி அமைச்சுக்கும் அனுப்புமாறு கட்டளையாக்கியுள்ளனர்.

குறித்த வழக்கானது எதிர்வரும் ஒக்டோர் 09ஆம் திகதிக்கு மீண்டும் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (ஐ)

## படையினர் வசமுள்ள காணிகள் படிப்படியாக விடுப்பு அமெரிக்கத் தூதரகத்தின் செயலரிடம் ஆளுநர் தெரிவிப்பு



வடக்கு மாகாணத்தின் நிலைத்த நீடித்த அபிவிருத்திக்காக முதலீட்டாளர்களை வரவேற்கின்றோம் என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன், இலங்கைக்கான அமெரிக்கத் தூதரகத்தின் அரசியல் மற்றும் பொருளாதார விடயங்களுக்குப் பொறுப்பான செயலர் அந்தோனி பெர்னார்ட்டிடம் சுட்டிக்காட்டினார்.

வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் இன்று செவ்வாய்க்கிழமை காலை அமெரிக்கத் தூதரக அதிகாரிகள் குழுவுக்கும் ஆளுநருக்கும் இடையிலான சந்திப்பு நடைபெற்றது.

வடக்கு மாகாணத்தின் நிலைமைகள் தொடர்பில் அறிந்து கொள்வதற்காக வந்துள்ளதாகவும், பல தரப்பினரையும் சந்தித்துள்ளதாகவும் அமெரிக்கத் தூதரகத்தின் செயலர் குறிப்பிட்டார்.

பாதுகாப்புத் தரப்பினர் வசமுள்ள காணிகளின் விடுவிப்புக்கள் அது தொடர்பான முன்னேற்றம் மற்றும் எதிர்கால காணி விடுவிப்புக்கள் உள்ளிட்ட விவரங்கள் தொடர்பில் ஆளுநரிடம், தூதரக அதிகாரி கேட்டறிந்து கொண்டார். மக்களின் காணிகள் மக்களுக்கே என்ற அரசாங்கத்தின் கொள்கை அடிப்படையில் படிப்படியாக காணிகள் விடுவிக்கப்பட்டு வருகின்றன என ஆளுநர் சுட்டிக்காட்டினார்.

கடந்த காலங்களில் முன்னைய ஆட்சியாளர்களால் மக்களுக்குச் சொந்தமான காணிகள், வயல் நிலங்கள் என்பன வனவளத் திணைக்களம் மற்றும் வன உயிரிகள் திணைக்களம் என்பனவற்றால் வர்த்தமானி மூலம் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளமையை எடுத்துக்கூறிய ஆளுநர் இது திட்டமிட்ட நடவடிக்கை எனவும் குறிப்பிட்டார். தற்போதைய அரசாங்கம் அவற்றை விடுவிப்பதற்காக எடுத்துள்ள முயற்சிகளையும் விவரித்தார்.

கடந்த கால அரசாங்கங்களால் முன்னெடுக்கப்பட்ட பாகுபாடான நடவடிக்கைகளால் ஏற்பட்ட பிரச்சினைகளின் தாக்கம் தற்போதும் எதிரொலிப்பதாகக் குறிப்பிட்ட ஆளுநர் மிகச் சவாலான நிலையிலும் அதனைத் தீர்ப்பதற்கான அனைத்து முயற்சிகளையும் அரசாங்கம் மேற்கொண்டுள்ளதாகவும் குறிப பிட்டார்.

மேலும், வடக்கு மாகாணத்தில் முன்னெடுக்கப்படும் அபிவிருத்திச் செயற்பாடுகள், எதிர்காலத்தில் முன்னெடுக்கத் திட்டமிடப்பட்டுள்ள நடவடிக்கைகள் தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

இந்தச் சந்திப்பில் வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் எஸ்.சத்தியசீலனும் கலந்துகொண்டிருந்தார். (ஐ)

# பருத்தித்துறையில் தியாக தீபம் திலீபனின் 38 வது நினைவேந்தல் அனுஸ்டிப்பு



பருத்தித்துறை தியாகி திலீபன் நினைவிடத்தில் தியாக தீபம் திலீபனின் 38 வது நினைவேந்தல் வடமராட்சி மக்களால் அனுஸ்டிக்கப்பட்டது.

முதல் நிகழ்வாக பொது ஈகைச் சுடரினை மாவீரர் லெப்டினென்ட் தென்றலின் சகோதரரும், ஜனநாயக போராளிகள் கட்சி தலைவருமான சி.வேந்தன் ஏற்றிவைக்க மலர்மாலையினை பருத்தித்துறை நகரசபையின் தவிசாளர் வின்சன் டீ போல் டக்ளஸ்போல் அணிவித்ததை தொடர்ந்து பருத்தித்துறை நகரசபை உறுப்பினர் ஜெ.ஜயகோபி, காணி உரிமைக்கான மக்கள் இயக்க தலைவர் இ.முரளிதரன் ஆகியோர் அணிவித்தனர்.

இதில் ஆயுள்வேத மருத்துவரும், தமிழ் மக்கள் கூட்டணி வடமராட்சி அமைப்பாளருமான சிவகுமார், காணி உரிமைக்கான இயக்க தலைவர் இ.முரளிதரன், ஜனநாயக போராளிகள் கட்சி தலைவர் சி.வேந்தன், பருத்தித்துறை பிரதேச சபை உறுப்பினர்கள் சுரேஸ்குமார், உட்பட பலரும் கலந்துகொண்டு தியாகி திலீபனுக்கு அஞ்சலி செலுத்தினர். (ஐ)

# அதிமுக ஆட்சி அமைந்தவுடன் நீலகிரியில் இ–பாஸ் நடைமுறை நீக்கப்படும்: எடப்பாடி பழனிசாமி வாக்குறுதி



ஆட்சிக்கு வந்ததும் நீலகிரியில் இ-பாஸ் நடைமுறை ரத்து செய்யப்படும் என இபிஎஸ் வாக்குறுதி அளித்துள்ளார். 2026 சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு தமிழகம் முழுவதும் 'மக்களை காப்போம், தமிழகத்தை மீட்போம்' என்ற பெயரில் அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி எழுச்சி பயணம் மேற்கொண்டு பிரசாரத்தில் ஈடுபட்டு வருகிறார்.

அந்த 54வது நாளான இன்று நீலகிரி மாவட்டம் குன்னூர் சட்டமன்ற தொகுதியில் மக்களிடையே உரையாற்றினார். அப்போது

நீலகிரி மாவட்டத்தை நேசித்தவர் அம்மா. அம்மாவின் மனதில் தனி இடம் பிடித்ததுதான் நீலகிரி. அதிமுக ஆட்சியில் நீலகிரிக்கு ஏராளமான திட்டங்கள் கொண்டு வரப்பட்டன. நீலகிரி மாவட்டத்திற்கு ரூ.400 கோடி செலவில் அரசு மருத்துவமனையை கொண்டு வந்தவன் நான். நீலகிரி மாவட்டத்தில் இ-பாஸ் நடைமுறையால் வியாபாரிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். 2026ல் அதிமுக ஆட்சிக்கு வந்ததும் நீலகிரி மாவட்டத்தில் நடைமுறையில் உள்ள இ-பாஸ் ரத்து செய்யப்படும். 10,000 கட்டடங்கள் கட்டுவதற்கான நிலுவையில் உள்ள அனுமதி வழங்கப்படும்.

அதிமுக ஆட்சியில் அரசே நிலம் வாங்கி வீடு இல்லாதவர்களுக்கு கான்கிரீட் வீடு கட்டி கொடுக்கப்படும். அதிமுக ஆட்சி மலர்ந்ததும் தாலிக்கு தங்கம் திட்டம் மீண்டும் கொண்டு வரப்படும். பச்சை தேயிலை தோட்ட தொழிலாளர் பிரச்சனைகளுக்கு உரிய தீர்வு காணப்படும். சுற்றுலாப் பயணிகள் அதிகம் வரும் குன்னூரில், மல்டி ஸ்பெஷாலிட்டி பார்க்கிங் கட்டித்தரப்படும். தமிழ்நாடு - கேரளா எல்லைப் பகுதியில் வசிக்கும் ஈழவா தீயா சமூக மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான, மத்திய அரசின் OBC பட்டியல் இணைப்பு குறித்து அதிமுக ஆட்சி அமைந்த பின் நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறினார். (ஐ)

# கூட்டாட்சிக் கருத்தியலுக்கு மதிப்பளியுங்கள், உரிய நிதியை விடுவியுங்கள்: முதல்வர் மு.க.ஸ்டாலின்



கூட்டாட்சிக் கருத்தியலுக்கு மதிப்பளியுங்கள், உரிய நிதியை விடுவியுங்கள் என முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில் ஜி.எஸ்.டி. வரிக்குறைப்பாலும் வருமான வரி விலக்குக்கான உச்ச வரம்பை உயர்த்தியதாலும் இந்தியர்கள் 2.5 லட்சம் கோடி ரூபாயைச் சேமிக்கலாம்" என மாண்புமிகு பிரதமர் அவர்கள் கூறியுள்ளார். இதைத்தானே தொடக்கத்தில் இருந்தே எதிர்க்கட்சிகளான நாங்கள் வலியுறுத்தி வந்தோம்? 8 ஆண்டுகளுக்கு முன்பே இந்த நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தால், இந்தியக் குடும்பங்கள் இன்னும் பல கோடி ரூபாயை எப்போதோ சேமித்திருக்குமே?

மேலும், தற்போது அறிவிக்கப்பட்டுள்ள வரிக்குறைப்பில் சரிபாதி அளவு மாநில அரசுகளின் பங்கிலிருந்துதான் செய்யப்படுகிறது. இந்த உண்மையை ஒன்றிய அரசு மறைப்பதாலும் பாராட்ட மறுப்பதாலும் இதனைச் சுட்டிக்காட்ட வேண்டியது எனது கடமையாகிறது. மற்றொரு புறம், ஒன்றிய பா.ஜ.க. அரசு மாநிலங்களுக்கு நியாயமாகச் சேர வேண்டிய நிதியைத் தர மறுத்து வருகிறது. இந்தித் திணிப்பை ஏற்க மறுக்கும் ஒரே காரணத்துக்காக, ஒருங்கிணைந்த கல்வித் திட்டத்தின்கீழ் தமிழ்நாட்டுக்கு வழங்க வேண்டிய நிதி மறுக்கப்படுகிறது. இந்த அநீதி எப்போது முடிவுக்கு வரும்? தங்கள் உரிமைகளைப் பாதுகாத்து, தம் மக்களுக்காக முன்நிற்கும் மாநில அரசுகளைத் தண்டிப்பதன் வழியாக இந்தியா வளர்ச்சி பெற முடியாது.

கூட்டாட்சிக் கருத்தியலுக்கு மதிப்பளியுங்கள், உரிய நிதியை விடுவியுங்கள், மக்களுக்கு நியாயமாகச் சேர வேண்டியதைத் தந்து அவர்களைப் பயனடைய விடுங்கள் என்று குறிப்பிட்டுள்ளார். (ஐ)

# நாட்டில் வாக்குத் திருட்டு நடைபெறும் வரை இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்காது



நாட்டில் வாக்குத் திருட்டு நடைபெறும் வரை இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்காது என மக்களவை எதிர்க்கட்சி தலைவர் ராகுல் காந்தி குற்றச்சாட்டு வைத்துள்ளார். ஒன்றிய பாஜக அரசுடன் இணைந்து தேர்தல் ஆணையம் வாக்குத் திருட்டில் ஈடுபடுவதாக ராகுல் காந்தி தொடர்ந்து குற்றம்சாட்டி வருவதுடன் அதற்கான ஆதாரங்களையும் வெளியிட்டு வருகிறார். அந்தவகையில், அவர் தனது எக்ஸ் வலைதள பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில்,

வேலையின்மை என்பது இந்தியாவில் இளைஞர்கள் எதிர்கொள்ளும் மிகப்பெரிய பிரச்சனையாகும். மேலும் அது நேரடியாக வாக்கு திருட்டுடன் தொடர்புடையது. ஒரு அரசாங்கம் பொதுமக்களின் நம்பிக்கையை வென்று ஆட்சிக்கு வரும்போது, அதன் முதல் கடமை இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு மற்றும் வாய்ப்புகளை வழங்குவதாகும். ஆனால், பாஜக தேர்தல்களில் நேர்மையாக வெற்றி பெறவில்லை. வாக்குகளைத் திருடி நிறுவனங்களைக் கட்டுப்படுத்துவதன் மூலம் ஆட்சியில் நீடிக்கிறார்கள். அதனால் தான் வேலையின்மை 45 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு உச்சத்தை எட்டியுள்ளது.

வேலைகள் குறைந்து வருகின்றன, ஆட்சேர்ப்பு செயல்முறைகள் சரிந்துள்ளன, இளைஞர்களின் எதிர்காலம் ஆபத்தில் உள்ளது. ஒவ்வொரு தேர்வு வினாத்தாள் கசிவும் ஒவ்வொரு ஆட்சேர்ப்பும் ஊழல் கதைகளுடன் இணைக்கப் பட்டுள்ளது. நாட்டின் இளைஞர்கள் கடினமாக உழைக்கிறார்கள், கனவு காண்கிறார்கள், தங்கள் எதிர்காலத்திற்காக போராடுகிறார்கள். ஆனால் மோடி தனது மக்கள் தொடர்பு, பிரபலங்களின் ஒப்புதல்கள் மற்றும் பில்லியனர் லாபத்தில் மட்டுமே கவனம் செலுத்துகிறார்.

இந்த அரசாங்கத்தின் அடையாளம் இளைஞர்களின் நம்பிக்கைகளை உடைத்து அவர்களை ஏமாற்றுவதற்கான அடையாளமாக மாறியுள்ளது. இப்போது நிலைமை மாறி வருகிறது. உண்மையான போராட்டம் வேலைகளுக்கு மட்டுமல்ல, வாக்கு திருட்டுக்கு எதிரானது என்பதை இந்திய இளைஞர்கள் புரிந்துகொள்கிறார்கள். ஏனென்றால் தேர்தல்கள் திருடப்படும் வரை, வேலையின்மை மற்றும் ஊழல் தொடர்ந்து அதிகரிக்கும். இளைஞர்கள் இனி வேலை திருட்டையோ அல்லது வாக்கு திருட்டையோ பொறுத்துக்கொள்ள மாட்டார்கள். இப்போது இறுதி தேசபக்தி இந்தியாவை வேலையின்மை மற்றும் வாக்கு திருட்டிலிருந்து விடுவிப்பதில் உள்ளது என குறிப்பிட்டுள்ளார். (ஐ)

# நடிகர்கள் துல்கர் சல்மான், பிரித்விராஜ் வீடுகளில் சுங்கத்துறை ரெய்டு: கேரளாவில் பரபரப்பு



கேரளாவில் நடிகர்கள் துல்கர் சல்மான், பிரித்விராஜ் வீடுகளில் சுங்கத்துறை அதிகாரிகள் சோதனை செய்து வருகின்றனர். பூடான் நாட்டின் ராணுவத்தின் உயர்ரக வாகனங்கள் சமீபத்தில் ஏலமிடப்பட்டுள்ளன. இந்த வாகனங்களை குறைந்த விலைக்கு ஏலம் எடுத்தவர்கள் அங்கிருந்து இமாச்சல பிரதேசத்துக்கு கொண்டு வந்துள்ளனர். அதன்பிறகு அந்த வாகனங்களை அதிக விலைக்கு விற்பனை செய்துள்ளனர். வாகனத்தின் மதிப்பை மறைத்தும், விற்பனை தொகையை மறைத்தும் ஒன்றிய அரசுக்கு பண இழப்பை ஏற்படுத்தியதாக கூறப்படுகிறது. இதுதொடர்பாக மத்திய வருவாய் புலனாய்வு அதிகாரிகள் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். ஆபரேஷன் நும்கூர் என்ற பெயரில் நாடு முழுவதும் சோதனை. பூடானில் நும்கூர் என்றால் வாகனம் என அர்த்தம்.

அந்த வகையில் கேரளா மாநிலம் கொச்சியில் உள்ள நடிகர் மம்முட்டியின் மகன் துல்கர் சல்மான் மற்றும் நடிகர் பிருத்விராஜ் ஆகியோருக்கு சொந்தமான வீடுகளில் இன்று காலை முதல் சுங்கத்துறை அதிகாரிகள் அதிரடி சோதனை மேற்கொண்டு வருகின்றனர். கொச்சியில் உள்ள துல்கர் சல்மான், பிரித்விராஜ் வீடுகள் உள்பட மொத்தம் 30 இடங்களில் இன்று திடீரென்று சுங்கத்துறை அதிகாரிகள் (Customs Officials) அதிரடியாக சோதனையை மேற்கொண்டுள்ளனர். பிரித்விராஜ் வீட்டில் அந்த கார் இல்லாததால் அதிகாரிகள் திரும்பிச் சென்றனர். பூட்டான் நாட்டின் வழியாக கார் இறக்குமதி செய்தது குறித்து விசாரணை நடைபெற்று வருவதாக தகவல் வெளியாகியுள்ளது. (ஐ)



# அயோத்தியில் தன்னிப்பூர் கிராமத்தில் மசூதி கட்ட சமர்ப்பித்த திட்டம் நிராகரிப்பு!!

உத்திர பிரதேசம்: அயோத்தியில் தன்னிப்பூர் கிராமத்தில் மசூதி கட்ட சமர்ப்பித்த திட்டம் நிராகரிக்கப்பட்டுள்ளது. தகவல் அறியும் உரிமைச் சட்ட பதிலில் மசூதி கட்டும் திட்டத்தை நிராகரித்தது தெரியவந்தது. பொதுப்பணி, உள்ளாட்சி, தீயணைப்பு துறைகளின் ஒப்புதல் பெறவில்லை என கூறி நிராகரிக்கப்பட்டது. மசூதி அறக்கட்டளை ரூ.4.02 லட்சம் விண்ணப்பத் தொகையை செலுத்தியதாக தகவல் வெளியாகியுள்ளது. (ஐ)

# வழிகாட்டிய பெண்கள்!





அனிதா பாலகிருஷ்ணா

‘ஆவதும் பெண்ணாலே அழிவதும் பெண்ணாலே’ என்று போகிற போக்கில் எல்லாவற்றையும் பெண்கள் தலையில் சுமத்திவிட்டுச் செல்லவே உலகம் பார்க்கிறது. ஆனால், அதன் உண்மையான விளக்கம், நன்மைகள் அனைத்தும் ஆவது பெண்ணாலே, தீயவை அழிவதும் பெண்ணாலே என்பது நம்மில் எத்தனை பேருக்குத் தெரியும்?

பெண்களற்ற ஆண்கள் என்கிற ஜப்பானிய எழுத்தாளர் ஹருகி முராகாமியின் புத்தகம் போல் பெண்கள் இல்லாத வாழ்வை ஆண்கள் மட்டுமல்ல, அவர்கள் இல்லாத வெறுமையை யாருமே கற்பனை செய்து பார்க்க முடியாது. ஒரு தாயாக, சகோதரியாக, தோழியாக, மனைவியாக, மகளாக ஒரு பெண் ஏதோ ஒரு வடிவத்தில் எல்லாக் காலகட்டங்களிலும் எல்லார் வாழ்விலும் உடன் வருகிறாள். நம் பாதையை எளிதாக்கும் அந்தப் பெண்ணின் பாதை அத்தனை எளிதானதாகப் பல நேரத்திலும் இருப்பதில்லை. அவள் அவளாக இருப்பதாலே அவள் பிறர் வாழ்க்கையை எளிதாக்க முயற்சிக்கிறாள்.

அவள் வாழ்க்கையிலும் அவளுக்குத் துணை வரும் வழிகாட்டியாக, முன்மாதிரியாக இருக்கும் சில பெண்கள் இருக்கிறார்கள். அவர்கள் கடந்து வந்த பாதைகளின் வலிகள் இவளுக்கு வழிகாட்டி இருக்கிறது, எளிதாக்கியிருக்கிறது.

அம்மா எல்லாக் குழந்தைகளுக்கும் முதல் ஆசிரியராக இருப்பதில் தொடங்கி பின் நல்ல தோழியாக மாறுபவர். நமக்கு நல்லதை மட்டுமே நினைக்கும் சிலரில் கண்டிப்பாக முதலிடம் பிடிப்பவர். அப்பாக்கள் நமக்கு ஹீரோ என்றால் அந்த அப்பாக்களே முழுதாக நம்பி இருக்கும், அறிவுரை கேட்கும், அவர்களுக்கு எந்தச் சூழலிலும் பக்கபலமாக இருக்கும் ஹீரோக்கள் அம்மாக்கள்தாம் . தன்னலம் பாராமல் கணவன், அவரின் குடும்பத்தினர், குழந்தைகள் என எல்லார் நலனையும் முதலில் பார்க்கும் ஒரு சுயநலமற்ற ஜீவன். அவள் அம்மாவும் அப்படித்தான்.

சிறு வயதில் தன் அம்மாவை இழந்து தந்தை, சகோதர சகோதரிகளுடன் வளர்ந்தவர் அவள் அம்மா. அந்த நாலு பேர் அவர் வாழ்க்கையை அப்படி ஒன்றும் எளிதாக இருக்க விடவில்லை. சொந்தம் என்கிற பெயரில் உடன் வந்து, ஏதாவது ஒரு விதத்தில் அவருக்குத் தொல்லைகள் தந்து, அந்தக் கஷ்டத்தைக் கண்டு ரசித்த இரக்கமற்றவர்களாகவே இருந்திருக்கிறார்கள். தானடைந்த கஷ்டத்தை எந்த விதத்திலும் வேறு யாரும் அனுபவிக்கக் கூடாது என்று முடிந்தவரை தன்னைச் சுற்றி இருக்கும் அத்தனை பேருக்கும் எல்லா உதவியும் செய்து அவர்கள் வாழ்க்கையை எளிதாக்கவே எப்போதும் முயற்சி செய்திருக்கிறார்கள்.

தன் வாழ்வில் கிடைக்காத மகிழ்ச்சிகள் எல்லாம் தன் குழந்தைகளுக்குக் கிடைக்க வேண்டும் என்று தனக்காகப் போராடாதவர் அவர்களுக்காகச் சமூகக் கோட்பாடுகளுடன் போராடுபவர். பிள்ளைகளின் வெற்றிகளை தன் வெற்றியாக எண்ணி மகிழ்வதும், தனக்கென ஓர் அடையாளம் வேண்டும் என்று நினைக்காமல் அவர்களுடைய அடையாளங்களை அவர்கள் உருவாக்கிக் கொள்ள உறுதுணையாக நிற்கும் அவள் அம்மா போன்ற பல அம்மாக்கள் உண்மையில் பாராட்டுகளையும் அங்கீகாரங்களையும் எதிர்பாராமல் மாற்றம் கொண்டு வர போராடும் சாமானிய போராளிகள். அவர்களின் வழிகாட்டுதலோ துணையோ தேவையான நேரத்தில் ஆறுதலோ இல்லாமல் இன்று இவள் வாழ்க்கையின் பிரச்னைகளை எளிதில் கடந்து வந்திருக்க முடியாது. பிரச்னை வரும்போது அவள் அம்மா இதைவிட கடினமான சூழ்நிலைகளையும் கடந்து வந்திருக்கிறார் என்கிற எண்ணமே பல நேரத்தில் அவளை மீண்டும் உற்சாகமூட்டி போராடும் குணத்தைத் தந்திருக்கிறது.

பெண்கள் என்றால் தலைகுனிந்து நிலம் பார்த்து நடக்க வேண்டும் என்று சொல்லி வளர்க்கப்பட்ட காலகட்டத்தில், “உங்களை நீங்களே குறுக்கிக்கொள்ளவும் வளைந்து நிற்கவும் செய்யாமல் நேர்கொண்ட பார்வையும் நிமிர்ந்து நடையுமாக பாரதி கண்ட புதுமைப் பெண்களாக நடப்பதுதான் என் மாணவிகளுக்கு அழகு” என்று முண்டாசுக் கவிஞனை அவளுக்கு அறிமுகப்படுத்தியவர் அவள் பள்ளி முதல்வர். அவர்களுக்குச் சொன்னதைப் போல்தானும் நிமிர்ந்து நடையுடனும் தன்னம்பிக்கையுடன் பள்ளியில் வலம் வரும் அவர்தான் வெளிஉலகில் அவள் முதலில் ரசித்த மங்கை. பள்ளி என்றால் படிப்பதற்கு மட்டுமே என்று தனியார் பள்ளிகள் மதிப்பெண்களை மட்டுமே குறியாகக் கொண்டு இருக்கும் நேரத்தில், குழந்தைகளுக்கு விளையாட்டு, பொது அறிவு , கவிதை கட்டுரை என்று கற்பனை வளத்தை மேம்படுத்துவதற்கு விதவிதமான போட்டிகள் போன்றவற்றை அறிமுகப்படுத்தி, படிப்பைத் தாண்டி பல இருக்கின்றன என்று அவள் பள்ளியில் அறிமுகப்படுத்தியது அவர்தான். இதற்கு பள்ளி நிர்வாகத்தில் பலர் எதிர்ப்பு தெரிவித்த போதிலும் தான் எடுத்த முடிவு சரி, அதனால் விளையும் நன்மைகளைக் கருத்தில் கொண்டு உறுதியுடன் நடைமுறைப்படுத்த ஆவண செய்தவர். பின்னாளில்,

“நெஞ்சை நிமிர்த்திகொண்டு நடப்பதை பார்த்தாயா? பெண் ஒரு அடக்கம் வேண்டாம்? சொல்பவர்களின் வார்த்தைகளை எல்லாம் கண்டுகொள்ளாமல் நிமிர்ந்து செல்லும் மனப்பான்மை வரக் காரணமான ஆசிரியர் அவர்.

ஆண் பிள்ளைகள்தாம் குடும்பத்திற்கு எல்லாம் செய்ய வேண்டும் என்று சமூகக் கட்டமைப்புகளைக் கடந்து பெண் பிள்ளைக்கும் இந்தக் கடமைகள் எல்லாம் இருக்கிறது என்று அவளுக்குக் காட்டிய தோழி. தன் குடும்பத்திற்காக உழைத்து, அவர்கள் தந்தை இறந்த பின்னும் அவரின் கடன்களை அடைக்கவும், குடும்பத்தினரைக் கவனித்துக் கொள்ளவும், தன் தங்கைகளுக்குத் திருமணம் செய்து வைக்கவும் என்று தன் வாழ்வை குறித்து யோசிக்காமல் 40 வயதை நெருங்கியும் திருமணம் செய்து கொள்ளாமல் குடும்பத்திற்காகப் பாடுபட்டுக் கொண்டிருப்பவர். ஒரு பெண் திருமணம் செய்து கொள்ளவில்லை என்றால் எத்தனை விதமான கேள்விகள் உண்டோ அத்தனையும் கடந்து வந்திருப்பவர். அதற்காக அவர் குடும்பத்தினரே சொன்ன வார்த்தைகளையும் கண்டுகொள்ளாமல் தன் கடமைகளைச் செய்து கொண்டிருப்பவர்.

நமக்குத் தாங்க முடியாத எந்தப் பாரத்தையும் வாழ்க்கை தருவதில்லை என்று நம்பிக்கை கொண்டவர்கள் மட்டுமே அதிகம் பாரங்கள் தாங்கவும் சோதிக்கப்படுவதாகவும் அவளுக்குத் தோன்றுவதுண்டு. எல்லாப் பிரச்னைகளையும் சிரிப்புடன் கடந்து செல்லும் அவளின் ஒரு தோழிக்கு புற்றுநோய் என்று கேள்விபட்டபோது அவள் உடைந்துவிட்டாள். ஆனால், அதைப் பார்த்துக் கொள்ளலாம் என்று தைரியமாக இருப்பவர். அனுதாபம் காட்ட வந்தவர்களைத் தவிர்த்து தனக்குத் தேவை இந்த நேரத்தில் அனுதாபங்கள் அல்ல, இந்தச் சவாலைச் சமாளிக்க உடன் இருக்கும் ஒரு நல்ல தோழி மட்டுமே என்பார்.



இவர்கள் எல்லாருக்கும் பொதுவான ஒரு விஷயம் என்னவென்றால் மற்றவர்கள் என்ன சொல்கிறார்கள், மற்றவர்கள் நாம் எப்படி இருக்க வேண்டும் என்று நினைக்கிறார்கள் என்கிற வட்டத்துக்குள் தன்னைச் சிறையிடாமல் இருப்பது. சவால்களை எதிர்கொண்டு அதில் வெற்றி பெற்று கடந்து வருவதுதான். தான் அறியாமலே பிறருக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகிறார்கள். அவர்கள் வாழ்க்கை எளிதில்லை, அவர்களின் பயணம் எளிதில்லை. ஆனால், அது அவள் போல் பலருக்கும் எடுத்துக்காட்டாக இருக்க உதவுகிறது.


இந்த நாலு பெண்களும் அவள் மனதளவில் மிகவும் நெருக்கமாவர்கள். அவர்களிடம் முக்கியமாக அவள் கற்றுக் கொண்டது ‘அந்த நாலு பேரைக்’ கண்டுகொள்ளாமல் தன் வேலையை மட்டும் செய்வது எப்படி என்பதைத்தான்.

# அமெரிக்காவுடனான கடைசி அணுசக்தி ஒப்பந்தத்தை மேலும் ஓராண்டுக்கு நீட்டிக்கப்படுவதாக ரஷ்யா அதிபர் புதின் அறிவிப்பு

அமெரிக்காவுடனான கடைசி அணுசக்தி ஒப்பந்தம் பிப்ரவரியில் காலாவதியாகும் நிலையில், அணு ஆயுத வரம்புகளை மேலும் ஒரு வருடத்திற்கு கடைப்பிடிக்கத் தயாராக இருப்பதாக ரஷ்ய அதிபர் விளாடிமிர் புதின் அறிவித்தார். மேலும் அமெரிக்கவும் இந்த ஒப்பந்தத்தை நீட்டித்து உச்சவரம்புகளை மதிக்கும் என எதிர்பார்க்கிறோம் என புதின் கூறியுள்ளார்.

2010-ம் ஆண்டு கையெழுத்திடப்பட்ட புதிய ஸ்டார்ட் ஒப்பந்தம் காலாவதியாக அனுமதிப்பது ஸ்திரமின்மையை சீர் குலைக்கும் என்றும், அணு ஆயுதங்களின் பெருக்கத்தைத் தூண்டும். மேலும் ஒரு முழு அபாய ஆயுதப் போட்டியைத் தூண்டுவதைத் தவிர்க்கவும், ஏற்றுக்கொள்ளக்கூடிய அளவிலான கணிக்கக்கூடிய தன்மை மற்றும் கட்டுப்பாட்டை உறுதி செய்யவும், புதிய ஸ்டார்ட் ஒப்பந்தத்தால் நிறுவப்பட்ட தற்போதைய நிலையைப் பராமரிக்க முயற்சிப்பது நியாயமானது என்று நாங்கள் நம்புகிறோம் என்று ரஷ்யாவில் புதின் பேசியுள்ளார்.

அப்போதைய அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா மற்றும் ரஷ்ய ஜனாதிபதி டிமிட்ரி மெட்வெடேவ் ஆகியோரால் கையெழுத்திடப்பட்ட புதிய ஸ்டார்ட், ஒவ்வொரு நாட்டிலும் 1,550 க்கும் மேற்பட்ட நிலைநிறுத்தப்பட்ட அணு ஆயுதங்கள் இருக்க கூடாது எனவும், 700 நிலைநிறுத்தப்பட்ட ஏவுகணைகள் மற்றும் குண்டுவீச்சு விமானங்கள் மட்டுமே இருக்க வேண்டும் என்று கட்டுப்படுத்துகிறது. (ஐ)






## அதிக திறமையான தொழில்நுட்ப பணியாளர்களை ஈர்க்கும் வகையில் அமெரிக்காவுக்கு போட்டியாக சீனா புதிய 'கே' விசா அறிமுகம்

அமெரிக்கா எச்.1 பி விசாவுக்கான ஆண்டு கட்டணத்தை உயர்த்திய நிலையில் திறன் வாய்ந்த தொழில்நுட்ப ஊழியர்களை ஈர்க்கும் வகையில் கே விசாவை சீனா அறிமுகப்படுத்துகிறது. அமெரிக்காவிற்கு வேலைக்கு செல்லும் வெளிநாட்டினர் இனிமேல் எச்-1பி விசா பெற 1,00,000 டாலர் (ரூ.88 லட்சம் ) செலுத்த வேண்டும் என்று டிரம்ப் நிர்வாகம் உத்தரவிட்டது. புதிதாக எச்.1 பி விசா விண்ணப்பிப்பவர்களுக்கு மட்டுமே ஒரு முறை கட்டணமாக ரூ.88 லட்சம் வசூலிக்கப்படும் என்றும் ஏற்கனவே விசா வைத்திருப்பவர்களுக்கு இது பொருந்தாது என்று அமெரிக்கா தெரிவித்துள்ளது.

அமெரிக்காவில் எச்.1 பி கட்டணம் பல மடங்கு உயர்த்தப்பட்டுள்ள நிலையில், கே விசாவை சீனா அறிமுகப்படுத்தி உள்ளது. எச்.1 பி கட்டணம் உயர்வால் பாதிக்கப்படும் உலகம் முழுவதும் உள்ள அதிக திறமைவாய்ந்த அறிவியல், தொழில்நுட்ப பணியாளர்களை கவரும் வகையில் இந்த விசாவை சீனா அறிமுகப்படுத்தியுள்ளது. அக்டோபர் 1ம் தேதி முதல் கே விசா அமுலுக்கு வருகிறது. சீன அரசு ஊடகமான சின்குவா வெளியிட்டுள்ள செய்தியில்,புதிய விசாவை சீன அரசு கவுன்சில் ஒப்புதல் அளித்துள்ளது. நாட்டின் உள்நுழைவு மற்றும் வெளியேற்றம் தொடர்பான விதிகளில் திருத்தம் செய்வதற்கு பிரதமர் லீ கியாங் ஒப்புதல் அளித்துள்ளார் என தெரிவித்துள்ளது. .(ஐ)

## "பாலஸ்தீனம் என்பது தனிநாடுதான்": பிரிட்டன், ஆஸ்திரேலியா, கனடாவை தொடர்ந்து பிரான்சும் அங்கீகரித்தது!!



பாலஸ்தீனம் என்பது தனிநாடுதான் என்று பெரும்பாலான உலக நாடுகள் அங்கீகரித்து அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளன. பாலஸ்தீனம் மேற்கு கரை, காசா முனை என இரண்டு பகுதிகளாக உள்ளது. இதில் காசா முனை ஹமாஸ் குழுவினரும், மேற்கு கரையை முகமது அப்பாஸ் தலைமையிலான பாலஸ்தீன அரசும் நிர்வகித்து வருகின்றன. கடந்த 2023-ம் ஆண்டில் ஹமாஸ் குழுவினர் இஸ்ரேலுக்குள் புகுந்து பயங்கரவாத தாக்குதல் நடத்தினர். இதைத்தொடர்ந்து காசை முனையில் செயல்பட்டு வரும் ஹமாஸ் குழு மீது போர் அறிவித்த இஸ்ரேல் 2 ஆண்டாக தாக்குதல் நடத்தி வருகிறது.

இந்தப் போரில் 65 ஆயிரத்திற்கும் அதிகமானோர் பலியாகி உள்ளனர். பாலஸ்தீனம் தனிபிரதேசமாக இருந்தாலும், உலக நாடுகள் அதனை தனி நாடாக அங்கீகரிக்கவில்லை. இந்த சூழலில், பிரிட்டன், ஆஸ்திரேலியா, கனடாவை தொடர்ந்து பிரான்சும் பாலஸ்தீனத்தை தனி நாடாக அங்கீகரித்துள்ளது. ஐநா கூட்டத்தில் பேசிய பிரான்ஸ் அதிபர் இம்மானுவேல் மேக்ரான், பாலஸ்தீனத்தை தனிநாடாக அங்கீகரிப்பது ஹமாஸ் இயக்கத்துக்கு கிடைத்த பெரும் தோல்வி என்று கூறியுள்ளார். இதே போல், ஹமாஸ் கட்டுப்பாட்டில் இருக்கக்கூடிய அனைத்து பனைய கைதிகளையும் விடுவிக்கும் பட்சத்தில் பாலஸ்தீனத்தை தனி நாடாக அங்கீகரிக்க தயார் என பெல்ஜியம் நிபந்தனை விதித்துள்ளது. ஐநா பொது சபையில் மொத்தம் 193 உறுப்பு நாடுகள் உள்ளன. அவற்றில் 151 நாடுகள் பாலஸ்தீனத்தை தனி நாடாக அறிவித்துள்ளன. (ஐ)

# கைபர் பக்துன்வா மாகாணத்தில் பாக். விமானப்படை குண்டுமழை பொதுமக்கள் உட்பட 30 பேர் உயிரிழப்பு



பாகிஸ்தான் நாட்டில் கைபர் பக்துன்வா மாகாணம் உள்ளது. வடமேற்கில் உள்ள இந்த மாகாணத்தின் கிழக்கில் பஞ்சாப் மாகாணம், தெற்கில் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரும், மேற்கில் ஆப்கானிஸ்தான் எல்லை உள்ளது. மலை பாங்கான இந்த பகுதிக்குள் செல்வது மிகவும் கடினம். இந்த பகுதியில் தெஹ்ரீக் இ தலிபான் பாகிஸ்தான்(டிடிபி) உள்ளிட்ட தீவிரவாத குழுக்கள் செயல்பட்டு வருவதாக கூறப்படுகிறது. இந்த நிலையில்,கைபர் மாவட்டத்தில் நேற்று முன்தினம் இரவு பாகிஸ்தான் விமான படை விமானங்கள் குண்டுவீசி தாக்குதல் நடத்தியது. இதில் அப்பாவி பொதுமக்கள் உட்பட 30 பேர் பலியானதாக உள்ளூர் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தெஹ்ரீக் இ தலிபான் தீவிரவாதிகள் தெற்கு வசீரிஸ்தானில் மறைந்திருந்து நடத்திய தாக்குதலில் 12 பாகிஸ்தான் வீரர்கள் கொல்லப்பட்டனர். அதற்கு பதிலடியாக தான் பாகிஸ்தான் ராணுவம் இந்த நடவடிக்கை எடுத்துள்ளது என தெரியவந்துள்ளது. போலீசார் கூறுகையில், தலிபான் தீவிரவாதிகளின் தளபதிகளான அமன் குல், மசூத் கான் ஆகியோர் கிராமத்தில் நாட்டு வெடிகுண்டு தயாரிக்கும் ஆலையை நிறுவியுள்ளனர். இதில் உள்ளூர் மக்கள் பலர் பணிபுரிகின்றனர். பொதுமக்களை மனித கேடயமாக தீவிரவாதிகள் பயன்படுத்துகின்றனர் என்று குற்றம்சாட்டினர்.

கைபர் மாவட்ட போலீஸ் அதிகாரி ஸபர் கான் கூறுகையில், மதுர் தரா என்ற கிராமத்தில் பயங்கர குண்டுவெடிப்பு நிகழ்ந்தது. இதில் 10 பொதுமக்கள் மற்றும் 14 தீவிரவாதிகள் பலியாகினர். குறிப்பிட்ட இடம் தெஹ்ரீக் தலிபான் அமைப்புக்கு சொந்தமான ஆயுத ஆலை. அதில் வெடிகுண்டுகளை சேமித்து வைத்திருந்தனர். அப்போது குண்டுவெடிப்பு நிகழ்ந்தது. அங்கு விமான படை தாக்குதல் நடத்தவில்லை என்றார். ஆனால் அந்த பகுதியில் உள்ளவர்கள் பாகிஸ்தான் விமான படை தாக்குதலில் குடியிருப்பு கட்டிடம் தரைமட்டமானது என்றனர் .(ஐ)

## வவுனியாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பெற்றவர்களுக்கான பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டன.

இந்த அஞ்சலி நிகழ்வில் கரைச்சி பிரதேச சபை தவிசாளர் வேழமாலிகிதன், யாழ். மாநாகர முன்னாள் மேயர் சட்டத்தரணி மணிவண்ணன், யாழ் மாவட்ட போராளிகள் நலன்புரிச் சங்கத் தலைவர் ஈஸ்வரன் மற்றும் போராளிகள் நலன்புரிச் சங்கத்தின் முக்கியஸ்தர்கள், அரசியல் பிரமுகர்கள், முன்னாள் போராளிகள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

## திலீபனுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இலட்சியத்துக்காகப் பல நாட்களாகப் பசி இருந்து உயிர் நீத்த தியாக தீபம் திலீபன் அண்ணாவுக்கு சிலை வைப்பதற்கு வவுனியாவில் இடம் ஒன்றை ஒதுக்கித் தாருங்கள் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடிதத்தை ஏற்றுக்கொண்ட வவுனியா மாநகர மேயர் சு. காண்டீபன், திலீபனின் சிலையை வைப்பதற்கு இடம் கோரி தங்களால் தரப்பட்ட கடிதத்தை மாநகர சபை அமர்வில் முன்வைப்பதாகவும், இந்தக் கோரிக்கையை விடுக்கும் தாங்கள் வேறு சில நடைமுறைகளும் இருப்பதன் காரணமாக அதனையும் செயற்படுத்தி தமக்கு அந்த ஆவணங்களையும் பெற்றுத் தருமாறும் தெரிவித்துள்ளார்.

## நிறைவேற்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

விடயங்களை மையப்படுத்தியமாகவே புதிய அரசமைப்புக்குரிய பணி இடம்பெறும். இதனை நாம் நிச்சயம் செய்வோம். இதற்கு எமக்கு கால அவகாசம் அவசியம்." - என்று ஜே.வி.பியின் பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா அறிவித்தார்.

தென்னிலங்கை ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலின்போது நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை நீக்கம் தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். ,

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் வழங்கப்பட்டுள்ள உறுதிமொழிகள் நிச்சயம் நிறைவேற்றப்படும். ஒவ்வொரு உறுதிமொழிக்கும் நாம் நிச்சயம் பொறுப்புகூறுவோம்.

முதலில் தள்ளாடும் நிலையில் உள்ள பொருளாதாரத்தை ஸ்தீரப்படுத்த வேண்டும். மக்களுக்கு நிவாரணத்தை வழங்க வேண்டும். ஊழல், மோசடிகளை முடிவுக்குக் கொண்டுவர வேண்டும். இவற்றை செய்யாமல் எடுத்த எடுப்பிலேயே நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையில் கைவைத்தால் மக்கள் அதனை விரும்பமாட்டார்கள்.

எமக்கு இன்னும் 4 வருடங்கள் உள்ளன. தற்போதுள்ள அரசமைப்புக்குப்பதிலாக புதிய அரசமைப்பு கொண்டுவரப்படும் என மக்களுக்கு உறுதியளிக்கப்பட்டுள்ளது.

இதற்குரிய பணியின்போது நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை நீக்கப்பட வேண்டும், புதிய தேர்தல் முறைமை உருவாக வேண்டும், அனைத்து மக்களுக்கும் உரிமைகள் கிடைக்ககூடிய வகையில் குறிப்பாக வடக்கு, கிழக்கு மக்களின் உரிமைகளை உறுதிப்படுத்தக்கூடிய யோசனைகள் இருக்க வேண்டும், மனித உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும்.

இவற்றை உள்ளடக்கிய வகையில் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். இதற்கு கால மெடுக்கும். நிபுணர்கள் மற்றும் மக்களின் கருத்துகளை உள்வாங்கி அரசமைப்பு தயாரிக்கப்படும். நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்படும். சர்வஜன வாக்கெடுப்பும் நடத்தப்படும்." - என்றார்.

# டிப்பர் வாகனம் மோதி 4 வயது குழந்தை பலி

*அம்பாறை, செப். 23*

*அம்பாறை, கல்முனை சந்தியிலிருந்து பண்டாரநாயக்க சுற்றுவட்டம் நோக்கிச் சென்ற டிப்பர் வாகனம், வீதியோரத்தில் நடந்து சென்ற குழந்தை மற்றும் பெண் மீது மோதிய விபத்தில் குழந்தை உயிரிழந்துள்ளது.*

*இந்த விபத்து நேற்று திங்கட்கிழமை இடம்பெற்றுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.*

*விபத்தில் குழந்தையும் பெண்ணும் படுகாயமடைந்து அம்பாறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் குழந்தை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளது.*

*உஹன பகுதியைச் சேர்ந்த 4 வயது குழந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.*

*இந்த விபத்துடன் தொடர்புடைய டிப்பர் வாகன ஓட்டுநர் கைது செய்யப்பட்டுள்ளதோடு, அம்பாறை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.*

# இலங்கைக்கும் ஐரோப்பிய ஒன்றியத்திற்கும் இடையில் ஒப்பந்தம்



மேம்பட்ட பல்லுயிர் பெருக்கம் மற்றும் திடக்கழிவு மேலாண்மை மூலம் நிலையான பொருளாதார மீட்சியை அடைவதை நோக்கமாகக் கொண்ட ஒரு புதிய திட்டத்தைத் தொடங்குவதற்காக, இலங்கை மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்திற்கும் இடையில் (EU) மானிய ஒப்பந்தத்தில் கையெழுத்துப்பட்டது.

பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளாட்சி அமைச்சு, சுற்றாடல் அமைச்சு மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் ஆகியவற்றால் கூட்டாக உருவாக்கப்பட்ட இந்தத் திட்டத்திற்கு, ஐரோப்பிய ஒன்றியத்தால் €8 மில்லியன் மானியம் வழங்கப்படவுள்ளது.

அச்சுறுத்தலுக்கு உள்ளான சுற்றுச்சூழல் அமைப்புகளை மீட்டெடுப்பதன் மூலமும், இலக்கு வைக்கப்பட்ட பாதுகாப்பு உத்திகளை செயல்படுத்துவதன் மூலமும், நிலையான நில பயன்பாட்டு நடைமுறைகளை ஊக்குவிப்பதன் மூலமும் பல்லுயிர் பாதுகாப்பிற்கு இந்த திட்டம் பங்களிக்கும்.

திடக்கழிவு மேலாண்மை அமைப்புகளுக்கான வளர்ந்து வரும் தேவையை பூர்த்தி செய்வதன் மூலம் சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் பொது சுகாதாரத்திற்கும் இந்த திட்டம் பங்களிக்கும்.

அரசாங்கத்தின் தேசிய கொள்கை அறிக்கையான "ஒரு வளமான நாடு - ஒரு அழகான வாழ்க்கை" யில் சிறப்பிக்கப்பட்டுள்ளபடி, பொருளாதார வளர்ச்சிக்கும் சுற்றுச்சூழல் நிலைத்தன்மைக்கும் இடையில் சமநிலையை ஏற்படுத்த வேண்டிய அவசரத் தேவையுடன் இந்த திட்டம் ஒத்துப்போகிறது.

சுற்றுச்சூழலுக்கு உகந்த மற்றும் சமநிலையான பொருளாதாரத்தை உருவாக்குவதற்கான முயற்சிகள் இலக்கு முடிவுகளை அடையவில்லை, ஆகவே ஐரோப்பிய ஒன்றியத்துடனான இந்த கூட்டாண்மை அந்த பயணத்தை வலுப்படுத்துவதில் ஒரு முக்கியமான மைல்கல்லாகும்.

இந்த மானிய ஒப்பந்தத்தில் இலங்கை அரசாங்கத்தின் சார்பாக நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார மேம்பாட்டு அமைச்சின் செயலாளர் கலாநிதி ஹர்ஷன சூரியப்பெரும அவர்களும், ஐரோப்பிய ஒன்றியத்தின் சார்பாக இலங்கைக்கான ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதர் மேதகு கார்மென் மொரேனோ அவர்களும் அதிகாரப்பூர்வமாக 2025 செப்டம்பர் 23 அன்று கையெழுத்திட்டனர்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் "புடழடியட புயவநறயல" கொள்கை மூலம் இதுபோன்ற திட்டங்களுக்கு ஐரோப்பிய ஒன்றியம் அளித்த பங்களிப்பு குறித்து இலங்கைக்கான ஐரோப்பிய ஒன்றிய தூதர் மேன்மை தங்கிய கார்மென் மொரேனோ கருத்துத் தெரிவிக்கையில்,

"இலங்கையின் மிக முக்கியமான வளங்களில் பல்லுயிர் பெருக்கம் ஒன்றாகும், மேலும் இந்த திட்டத்தின் மூலம் கழிவு மேலாண்மையை மேம்படுத்துவதன் மூலம் அதன் பாதுகாப்பை வலுப்படுத்த இலங்கை அரசாங்கத்துடன் இணைந்து செயல்படுவோம்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் அனுபவம், தொழில்நுட்பம் மற்றும் தனியார் துறை முதலீடு ஆகியவை இந்த திட்டத்தின் முக்கிய கூறுகளாகும், இது இலங்கையின் கொள்கைகளை சர்வதேச சமூகத்துடன் இணைக்க ஒரு வாய்ப்பை வழங்கும்.

பல்லுயிரியலைப் பாதுகாப்பது உலகளாவிய ஆரோக்கியத்திற்கும் காலநிலை மாற்றத்தை எதிர்த்துப் போராடுவதற்கும் பங்களிக்கிறது"

ஐரோப்பிய ஒன்றியத்தின் மதிப்புமிக்க ஆதரவிற்கு மனமார்ந்த நன்றியைத் தெரிவித்த நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார மேம்பாட்டு அமைச்சின் செயலாளர், இந்தத் திட்டம் இலங்கையின் நிலையான வளர்ச்சி நிகழ்ச்சி நிரல் மற்றும் பல்லுயிரியலைப் பாதுகாப்பதற்கான அர்ப்பணிப்புடன் நன்கு ஒத்துப்போகிறது என்பதை வலியுறுத்தியதோடு, இந்த ஒப்பந்தம் இலங்கைக்கும் ஐரோப்பிய ஒன்றியத்திற்கும் இடையிலான வலுவான மற்றும் தொடர்ச்சியான கூட்டாண்மைக்கு ஒரு சான்றாகவும் அமையும் என்றும், சுற்றுச்சூழல் நிலைத்தன்மை, உள்ளடக்கிய வளர்ச்சி மற்றும் நீண்டகால சமநிலையான பொருளாதார மீள்தன்மைக்கான எங்கள் கூட்டாண்மையில் ஒரு முக்கியமான மைல்கல்லைக் குறிக்கிறது என்றும் அவர் மேலும் கூறினார்.

# தங்காலையில் மீட்கப்பட்ட போதைப்பொருள் விவகாரம்- பேர் கைது!

தங்காலையில் மூன்று லொறிகளில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் 9,888 மில்லியன் ரூபாய் பெறுமதியான, 705.91 கிலோகிராம் போதைப்பொருட்கள்நேற்று (22) மீட்கப்பட்டிருந்தன.

இந்த சம்பவம் தொடர்பில் இரண்டு சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தங்காலை, சீனிமோதர பகுதியில் புனரமைப்புப் பணிகள் நடைபெற்று வரும் ஒரு வீட்டில் இரண்டு ஆண்கள் உயிரிழந்த நிலையில் மீட்கப்பட்டமையை அடுத்து முன்னெடுக்கப்பட்ட சோதனையில் 3 லொறிகளில் இருந்து நேற்று இந்த போதைப்பொருட்கள் கைப்பற்றப்பட்டிருந்தன.

தங்காலை, சீனிமோதர பகுதியில் புனரமைப்புப் பணிகள் நடைபெற்று வரும் ஒரு வீட்டில் இருந்து இரண்டு ஆண்களின் சடலங்கள் நேற்று காலை கண்டுபிடிக்கப்பட்டன.

தங்காலை, சீனிமோதரவில் ஒரு பழைய வீட்டை வாங்கிய ஒருவர் அதைச் சுற்றி ஒரு மதிலைக் கட்டி பல நாட்களாக கட்டுமானப் பணிகளை மேற்கொண்டு வந்ததாகக் கூறப்படுகிறது.

அந்த வீட்டைப் புனரமைக்கும் பணிகளுக்கு 3 தொழிலாளர்கள் பணிக்கு அமர்த்தப்பட்டுள்ள நிலையில், அவர்கள் மூவரும் இணைந்து வீட்டில் மது அருந்தியிருந்தியுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இந்நிலையில் அவர்களில் ஒருவருக்கு திடீரென சுகவீனம் ஏற்பட்டுள்ளது. இதனை அடுத்து அவர் தமது பிள்ளைகளுக்கு அறிவித்ததாகவும், அவர்கள் வந்து அந்த நபரை தங்காலை ஆதார வைத்தியசாலையில் அனுமதித்ததாகவும் பொலிஸார் விசாரணையில் தெரிவிக்கப்படுகின்றது. எவ்வாறாயினும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நபர் சிகிச்சை பலனின்றி நேற்று காலை உயிரிழந்ததாக கூறப்படுகின்றது.

உயிரிழந்தவர் தங்காலை பகுதியைச் சேர்ந்த விதாரந்தெனியவைச் சேர்ந்த 50 வயதுடைய துசித குமார என தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த நபரின் இரண்டு பிள்ளைகளே இன்றைய தினம் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்களின் தந்தையின் மரணம் குறித்து சந்தேகநபர்கள் தங்காலை பொலிஸில் வழங்கிய முறைப்பாட்டை அடுத்து, பொலிஸார் அந்த கட்டுமானப் பணிகள் நடைபெற்ற வீட்டிற்குச் நேற்று சென்றிருந்தனர்.

அந்த வீட்டின் ஒரு அறையில் மேலும் இரண்டு சடலங்கள் இருந்தமை கண்டறியப்பட்டிருந்ததுடன் அங்கு 3 லொறிகளில் இருந்து பெருமளவிலான போதைப்பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டிருந்தன.

அத்துடன் சம்பவம் தொடர்பில் ஏற்கனவே லொறிகளின் மூன்று சாரதிகளும் பொலிஸாரினால் தடுத்து வைக்கப்பட்டு விசாரணை செய்யப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# எக்ஸ் பிரஸ் பேர்ள் கப்பல் ஏற்படுத்திய பாதிப்பு– இழப்பீட்டை வழங்க மறுப்பு!

இலங்கை கடற்பரப்பில் யணித்த போது சிங்கப்பூருக்கு சொந்தமான எக்ஸ் பிரஸ் பேர்ள் **(MV X-Press Pearl)** கப்பல் தீப்பற்றுதலுக்கு உள்ளானமையால், ஏற்பட்ட சுற்றுச்சூழல் பாதிப்புக்கான இழப்பீட்டை வழங்குவதற்கு அந்த கப்பல் நிறுவனம் மறுத்துள்ளது.

சிங்கப்பூருக்கு சொந்தமான எக்ஸ் பிரஸ் பேர்ள் (ஆஏ ஓ-ீசநளள ீநயசட) கப்பல் 2021 ஆம் ஆண்டு இலங்கை கடற்பரப்பில் பயணித்த போது தீப்பற்றுதலுக்கு உள்ளாகியமையால், நாட்டின் கடல் வளம் பாரிய அளவில் மாசடைந்ததுடன், கடல் வாழ் உயிரினங்களும் இறந்து கரை ஒதுங்கியிருந்தன.

இந்நிலையில் அதற்குரிய இழப்பீடாக ஒரு பில்லியன் அமெரிக்க டொலரை செலுத்த வேண்டும் என அந்த கப்பலின் நிறுவனமான ஓ-ீசநளள குநநனநசள நிறுவனத்திற்கு நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

எனினும் அந்த இழப்பீட்டை செலுத்துவதற்கு குறித்த நிறுவனம் மறுப்பு வெளியிட்டுள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.








இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 23.09.2025 வெளியிடப்பெற்றது.